# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 23.08.2018

**தமிழக நிகழ்வுகள்**

- தமிழகத்தில் விபத்து சிகிச்சைகளின் தரத்தை உயர்த்துவது தொடர்பாக ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாநில அரசுடன் தமிழக சுகாதாரத் துறை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
    - தமிழக சுகாதாரத் துறை சார்பில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை சிறப்பு திட்டமானது (தாய் திட்டம்) ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தின் விபத்து சிகிச்சை பிரிவுகளின் நடைமுறைகளை பின்பற்றி செயல்படுத்தப்படுகிறது.




- தமிழக அரசின் 'பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு' பிரச்சாரத்தின் விளம்பரத் தூதுவர்களாக நடிகர் சூர்யா, கார்த்தி, விவேக் மற்றும் நடிகை ஜோதிகா நியமிக்கப்பட்டுள்ளார்.
    - தமிழகத்தில் 2019ம் ஆண்டு ஜனவரி 1 முதல் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com



**இந்திய நிகழ்வுகள்**

- மகாத்மா காந்தியின் 150-வது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதற்காக மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகம் 32 அம்சத் திட்டத்தைத் தயாரித்துள்ளது.
  - காந்தி பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக ரூ.150 கோடி ஒதுக்கப்படும் என்று கடந்த பட்ஜெட் உரையின் போது மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.



- இரயில்வே ஓய்வூதியதாரர்கள் தங்களது ஓய்வூதியம் குறித்த

தகவல்களை எளிதாக அறிந்து கொள்வதற்காக ‘ஆர்பன்’ என்ற இணையதளம் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

- ARPAN – Advanced Railway Pension Access Network)




**உலக நிகழ்வுகள்**

- நாசாவின் எம்3 எனப்படும் “மூன் மினராலஜி மேப்பர்” என்ற சாதனம் மூலம் நிலவின் ஒரு பக்கம் முழுவதும் ஐஸ் கட்டியால் நிரம்பி இருப்பதை இஸ்ரோ கண்டுபிடித்துள்ளது.



- உலகில் முதல் முறையாக பீங்கான் மீது 4D பிரிண்டின் தொழில்நுட்பத்தை ஹாங்காங் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.



- வட கொரியா – தென் கொரியா இடையேயான எல்லைப் பகுதிகளில் உள்ள இராணுவ நிலைகளை மூடுவதற்கு இரு நாடுகளும் முடிவு செய்துள்ளது.



**விளையாட்டு நிகழ்வுகள்**

- நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே நடைபெறும் 18வது ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியா 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.
    - இதுவரை ஆசிய விளையாட்டு போட்டியில் 4 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலம் பெற்று, 15 பதக்கங்களுடன் இந்தியா 7வது இடத்தில் உள்ளது.
    - 37 தங்கம் பெற்று சீனா முதலாம் இடத்தில் உள்ளது.




- ஆசிய விளையாட்டுப் போட்டியின், ஆடவர் டபிள் ட்ராப் துப்பாக்கிச் சுடுபிரிவில் ஷர்துல் விஹான் (15 வயது) வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.



We Shine Academy™

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

- சூரியனைப் பற்றி ஆராய்வதற்காக இந்தியா அனுப்பும் முதல் செயற்கைக்கோளான ‘ஆதித்தியா L1’ பி.எஸ்.எல்.வி – XL ராக்கெட் மூலம் 2019 – 2020 காலக்கட்டத்தில் அனுப்பப்படவுள்ளது.




**வர்த்தக நிகழ்வுகள்**

- உலக அளவில் மொபைல் ஃபோன்கள் உற்பத்தியில் இந்தியா 2ம் இடத்தைப் பிடித்துள்ளது.
  - முதலிடத்தில் சீனா உள்ளது.
  - உள்நாட்டில் மொபைல் ஃபோன் உற்பத்தி அதிகரிப்பால் கடந்த சில ஆண்டுகளில் 3 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள அன்னியச் செலாவணியை இந்தியா சேமித்துள்ளது.



We Shine Academy™



We Shine Academy™